செ.வெ.எண்.463 11.08.2009.

# மத்திய சமூகநல வாரியம்
# பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்
(இந்திய அரசு)

2009/2010ஆம் ஆண்டிற்கான நிதியுதவி பெறுவதற்காக தொண்டு நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மத்திய சமூகநல வாரியம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் தொண்டு நிறுவனங்களுக்கு தேசிய அளவில் நிதியுதவி வழங்கி வருகிறது. பதிவு செய்யப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் / தொண்டு நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட திட்டங்களை நடத்த நிதியுதவி வழங்கப்படும்.

1) குடும்பம் சம்பந்தப்பட்ட விரச்சனைகளை அணுகுவதற்கு குடும்ப ஆலோசனை மையங்கள் (Family Counselling Centre) (இத்திட்டம் செயல்படாத மாவட்டத்திற்கு மட்டும்)
2) படிப்பை இடையில் நிறுத்திய அல்லது வழக்கமான பள்ளி கல்வியை பெற்றிராத பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி வழங்குவதற்கு கல்வியின் ஒருங்கிணைந்த படிப்புகள், (Condensed course of Education),
3) குறிப்பாக பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் விழிப்புணர்வை உருவாக்குவதற்கு விழிப்புணர்வை உருவாக்கும் திட்டம் (Awareness Generation Programme).
4) பணிபுரியும் பெண்களுக்கு ஆதரவு சேவைகளை வழங்குவதற்கு பணிபுரியும் பெண்களுக்கான தங்கும் விடுதிகள். (Working Women's Hostels).
5) இத்திட்டங்களினால் பலன் பெற்றிராத பிரிவினர்களின் மேம்பாடு மற்றும் நலத்திற்காக புதுமையான திட்டங்கள் (Innovative Schemes)

தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்ப படிவங்களை பெற ( ஈ –அவேதன்) e-AWEDAN மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தெள்ளதெளிவாக ஒழிவு மறைவின்றி விண்ணப்படிவத்தின் நிலையை அறிய இயலும். இதற்கு கண்டிப்பாக படிவம் எண் 1ஐ பூர்த்தி செய்ய வேண்டும் (Form I) இந்த ஆண்டு முதல் படிவம் எண் 2 (Form II) அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறையின் மூலம் விண்ணப்பத்தின் நிலை மற்றும் கண்கானிப்பின் நிலை பற்றி நிறுவனங்கள் இணையதளத்திலேயே அறிந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவையான விபரங்களை வாரியத்தின் இணைய தளம் www.cswb.gov.in –ல் அறியவும்.

விண்ணப்பப்படிவங்களை அனுப்ப 30 ஆகஸ்டு 2009 கடைசி தேதியாகும். நிறைவு செய்யப்படாத, கால தாமதமான விண்ணப்ப படிவங்கள் ஏற்று கொள்ளப்பட மாட்டாது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.